Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW20 |
| | | Defence |
| | | Court |
| Name | : அழகர்சாமி | |
| Father / Husband Name | : நடராஜன் | |
| Village | : மதுரை | |
| Taluk | : மதுரை | |
| Caste | : | |
| Calling | : பாதுகாவலர் | |
| Religion | : இந்து | |
| Age | : 63 | |

( 3, 4, 6 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 2 வது எதிரி தரப்பில் குவிமுச 317 மனு அனுமதிக்கப்பட்டது. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 29.11.2024

முதல் விசாரணை :–

நான் மதுரையில் ஜெய்கிந்த்புரத்தில் குடியிருந்து வருகிறேன். வில்லாபுரம் SVR மருத்துவமனையில் காவலராக வேலை செய்கிறேன். இதற்கு முன்னால் மதுரை பெரியார் பஸ் நிலையம் அருகில் உள்ள ASV லாட்ஜில் மேலாளராக பணிபுரிந்தேன். 2017 ம் வருடம் ஒரு நாள் நான் காலையில் 09.00 மணிக்கு லாட்ஜில் பணிக்கு சென்றேன். அதன் முதல் நாள் இரவு நாகராஜன் என்பவர் 17 ம் தேதி இரவு மேலாளராக பணியில் இருந்து மதுரையைச் சேர்ந்த குணா என்பவருக்கு ரூம் கொடுத்துள்ளார். 207 ம் நம்பர் அறையில் தங்கிருந்த நபர்கள் சரியில்லை என்று ரூம் பாய் நாகையா சொன்னார். பின்பு நான் வங்கிக்கு சென்றுவிட்டேன். 02.30 மணிக்கு நான் லாட்ஜில் வந்த போது அந்த நபர்கள் ரூமை காலி செய்து சென்றுவிட்டார்கள். இரண்டு மாதம் கழித்து நரிக்குடி காவல் ஆய்வாளர் லாட்ஜில் வந்து சிசிடிவி கேமராவை ஆய்வு செய்தார். சிசிடிவி கேமராவில் தங்கிருந்த நபர்களை பார்த்தார். அந்த நபர்கள் ஆஜர் எதிரிகள் தானா என்று சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சிசிடிவியை ஆய்வாளர் பார்த்ததாக நான் அவரது விசாரணையில் சொன்னேன். அந்த விபரம் என்னிடம் காண்பிக்கப்படும் குவிமுச 161(3) வாக்குமூலத்தில் இல்லை என்றால் எனக்கு சரியாக கண் தெரியவில்லை. நான் அந்த லாட்ஜில் வேலை பார்த்ததற்கு அடையாள அட்டை எதுவும் கொடுக்கவில்லை.

நான் போலீசார் வந்ததாகவும், சிசிடிவி கேமராவை பார்த்ததாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.